# தமிழ்

## மொழி அறிமுகம்

- மொழி என்பது தகவல் தொடர்பு கொள்ள மட்டுமல்லாது, சக மனிதர்களை (சமூகத்தை) புரிந்து கொள்ளவும், தன்னை முழுமையாக வெளிப்படுத்தவும் உதவுகிறது.
- ஒருவரின் சிறப்பான மொழி ஆளுமையே தன்னை முழுமையாக வெளிப்படுத்தவும், சக மனிதர்களை புரிந்து கொள்வதையும் நிர்ணயிக்கிறது.
- ஒருவரின் தாய் மொழிக்கற்றலே, அவரது சுயமாக சிந்திக்கும் திறனும், படைப்பாற்றலும் வளர ஏதுவாக அமைகிறது. அந்த வகையில் தாய்மொழிக்கற்றல் என்பது முக்கியத்துவம் கல்வியில் முக்கியத்துவம் பெறுகிறது.

## மொழிப்பாடம் - மற்ற பாடத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டது?

- மொழிப்பாடம் திறன் அடிப்படையிலான பாடம். மற்ற அறிவுப் பாடங்க்களில் பாடப்பொருளைச் சார்ந்து மட்டுமே கற்றல் - கற்பித்தலும், மதிப்பீடும் செய்யப்படுகிறது.
- மொழிப்பாடத்தில் திறனை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே கற்றல் - கற்பித்தலும், மதிப்பீடும் செய்வதே சாலச் சிறந்தது.
- ஒருவரின் தாய்மொழிக்கற்றலே, அவரது சுயமாக சிந்தித்தல் திறனும், படைப்பாற்றலும் வளர ஏதுவாக அமையும். அந்த வகையில் தாய்மொழிக் கற்றல் என்பது கல்வி முறையில் முக்கியமானதாக அமைகிறது.
- தாய் மொழிக்கட்டமைப்பைத் தெளிவாக புரிந்து கொண்டால் தான் மற்ற மொழிக் கட்டமைப்பபை புரிந்து கொள்ள முடியும்

## எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் (SABL)

- ✓ செயல்வழிக் கற்றல் என்பது குழந்தைகள் செயல்பாடுகளின் மூலம் கற்றல் - கற்பித்தலும், தானே கற்றலுடன் கூடிய மதிப்பீடும் கல்வி முறையே ஆகும். இதில் வகுப்பறை முழுவதுமான குழுவிலும், சிறு குழுவிலும், சக குழந்தையுடனும் செயல்பாடுகளின் மூலம் கற்றல் - கற்பித்தல் நிகழ்கிறது.
- ✓ செயல்பாடுகளின் மூலம் குழந்தைகள் கற்றல்- கற்பித்தல் நிகழ்வதால் என்றும் நிலையாக, நடைமுறை வாழ்வியலில் பயன்படுத்த இயலும்.
- ✓ குழந்தைகளுக்கு இயல்பாக கற்கும் ஆர்வம் உண்டு. தன்னிடம் இயல்பாக நடைமுறையில் உள்ள பொருள்களை ஆய்வு செய்து, கற்கும் உள்ளார்வம் இயல்பாக உள்ளது.
- ✓ விரிவுரை முறை குழந்தைகளின் உளவியலுக்கு எதிரான ஒன்று.

## எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் அட்டைகளிலுள்ள மாற்றங்கள்

- *பாடத்திற்கு நீல வண்ணம்*
- *பார்த்தவுடனே பெயர் கூறும்வகையில் சின்னங்கள்*
- *பொதுவான சின்னங்கள்*
- *பாடங்களுக்கான சிறப்பு சின்னங்கள்*
- *ஒன்று மற்றும் இரண்டு வகுப்புகள் சேர்ந்து ஒரு ஏணிப்படியாகவும், மூன்று மற்றும் நான்கு வகுப்புகள் சேர்ந்து மற்றொரு* ஏணிப்படியாகவும் அமைக்கப்பட்டுள்ளன.
- படிநிலை எண்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
- திறன்களைப் புத்தகத்துடன் இணைத்துக் கற்றல் அட்டைகள் வடிவமைத்துள்ளதால், கற்றல் அட்டைகளின் எண்ணிக்கை குறைவு.

www.TeacherTN.com

## தமிழ்

| வ எண். | தமிழ் சின்னங்கள் | சின்னங்களின் பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1 |  | **சின்னங்கள் அறிமுகம்**<br><br>திறன்: கேட்டுப் புரிந்து கொள்ளுதல், உற்றுநோக்குதல். | சின்னங்களை அறிமுகப்படுத்தவும். |
| 2 |  | **நுண்தசைப் பயிற்சி**<br><br>திறன்: கைகள் மற்றும் கைகளுக்கான தசைப்பயிற்சி | தாளைக் கசக்குதல், களிமண் / சீனக்களிமண்ணைப் பிசைதல், நாணயங்களை தலையில் போட்டு எடுக்கச் செய்தல் போன்ற நுண் தசைப்பயிற்சி அளிக்கவும். நேர்கோடு மற்றும் வளைக்கோட்டுப் பயிற்சி அளிக்ககவும். |
| 3 |  | **சொந்தக் கருத்தைப் பேசுதல்**<br><br>திறன்: தங்குதடையின் பேசுதல். | திறனுக்கு ஏற்ப படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அத்திறன் சென்றடைவதற்கேற்ப, குழந்தைகளைப் பேசத் தூண்டவும். கதைகளாகவோ, தொடர் நிகழ்ச்சிகளாகவோ தங்கள் வாழ்க்கை அனுபவங்களோடு இணைத்தோ பேசத் தூண்டலாம். |
| 4 |  | **பாடல்**<br><br>திறன்: கேட்டல் மற்றும் எளிய பாடல்களைப் பாடுதல் | பாடலை இராகத்துடனும், பாடலுக்குரிய அசைவுகளுடனும் பாடச் செய்யவும். பாடல் கற்பித்தலில் அந்தந்த பாடலுக்கான திறனோடு குழந்தைகளுக்குத் கற்பித்தலும், மதிப்பீடும் செய்யவும். காலை நேரத்தில் குழுவாக இணைத்துக் கற்பிக்கலாம். |
| 5 |  | **கற்றல் கற்பித்தல்**<br><br>திறன்: பாடப்பகுதிறைக் கற்பித்தல் | பாடப்பகுதிகளைக் கற்பித்தல் இச்செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. பாடப்பகுதிகளை, அதில் அடங்கியுள்ள திறன் சென்றடையுமாறு ஒவ்வொரு குழந்தைக்கும் ஆசிரியர் கற்பிக்கவும். |
| 6 |  | **செய்யுள்**<br><br>திறன்: செய்யுள் இன்பம் அறிதல். | செய்யுள் பகுதி இச்செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. செய்யுளை இசையுடன் கற்பிக்கலாம். செய்யுளை விளக்குவதற்கேற்ப கதைகள் கூறலாம். நடைமுறையில் உள்ள வாழ்க்கை அனுபவங்களோடு இணைத்துக் கற்பிக்கவும். |
| 7 |  | **மொழி அறிவோம்**<br><br>திறன்: மொழியின் அடிப்படை நடைமுறை இலக்கணம் அறிதல். | நடைமுறை இலக்கணங்கள் எடுத்துக்காட்டுகளுடன் இச்செயல்பாடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்து மேலும் எடுத்துக்காட்டுகள் கூறி விளக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| 8 |  | **படம் பார்த்து பெயரைக் கூறுதல்**<br><br>திறன்: அறிந்த சொற்களில் இருந்து எழுத்துகளை அறிதல் | இவ்வட்டையின் முன் பக்க படத்தில் உள்ள பொருளின் பெயரைக் கூறச்செய்து அதன் விரிவடிவத்தை உற்றுநோக்கச் செய்யவும். அவ்வட்டையின் கூறச்செய்து, அறிமுகம் செய்ய வேண்டிய எழுத்தை குழந்தைகளின் மனதில் பதிய வைக்கவும். |
| 9 |  | **எழுத்தட்டை அடுக்குதல்**<br><br>திறன்: சொற்களை அறிதல் | படம் பார்த்து பெயரைச் சொல்லுதல் அட்டையின் முதல் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்குரிய எழுத்தட்டைகளை அடுக்கச் செய்யவும். எழுத்தட்டைகளை அடுக்கும் போதே இணைத்துப் படிக்கும் வகையிலும், மெற்யெழுத்துக்களை அறிமுகப்படுத்தியும் கற்பிக்கவும். எ.கா. ப பட் பட்ட பட்டம். |
| 10 |  | **விளையாடுவோம்**<br>திறன்: ஒருங்கிணைந்த உடலியக்கச் செயல்பாடு, குழு மனப்பாண்மை | உள் அரங்க விளையாட்டுகள், வெளி அரங்க விளையாட்டுகள் மொழி விளையாட்டுகள் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. இச்செயல்பாட்டை குழுவாக இணைத்து கற்பிக்கவும். மாலை நேரத்திலும் இச்செயல்பாட்டை செயல்படுத்தலாம். |
| 11 |  | **படித்துப்பார்** | குழந்தைகள் புத்தகத்தில் உள்ளவற்றைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு ஏற்ப இச்செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளை வாய் விட்டுப் படிப்பதற்கு வாய்ப்பளிக்கலாம். |
| 12 |  | **படிப்போம் எழுதுவோம்**<br><br>திறன்: புதிய சொற்கள், சொற்றொடர்களைப் படித்தல், எழுதுதல். | முதல் இரண்டு வகுப்புகளில் சொற்றொடர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. படித்துப் புரிந்து கொண்டு எழுதச் செய்யவும். சொல்வதைக் கேட்டு எழுதுதலுக்கும் இவ்வட்டையைப் பயன்படுத்தலாம். ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பிற்கான அட்டைகள் அனைத்திலும் சொற்களஞ்சியப் பெருக்கம் திறனே பொதுவாக உள்ளது. |
| 13 |  | **கதை படிப்போம்**<br><br>திறன்: படித்துப் புரிந்து கொள்ளுதல். | முதல் வகுப்பில், குழந்தைகள் தாங்கள் இதுவரைக் கேட்டறிந்த கதைகளையும், தாமாகவே உருவாக்கிய கதைகளையும் கூறச் செய்தல். பிற வகுப்புகளில் அட்டைகளில் உள்ளகதைகைளைப் படித்துப் புரிந்துகொண்டு, ஆசிரியரிடம் கதையைக் கூறச் செய்தல். பின்னர் அதிலுள்ள பயிற்சிகளைச் செய்ய வைக்கவும். |
| 14 |  | **தொடர் வண்டி**<br><br>திறன்:உற்றுநோக்குதல். | படங்கள் / எழுத்துகள் / சொற்கள் அடங்கிய அட்டைகளை தொடர்வண்டி போல் அடுக்கச் செய்யவும். |
| 15 |  | **நடிப்போம் நடிப்போம்**<br><br>திறன்: நடித்தல், பேசுதல். | புத்தகத்தில் உள்ள பாடங்களில் நடிப்பதற்கேற்ப அமைந்த பாடப்பகுதிகள் இச்செயல்பாடுகளாக கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் குழுவாக இணைந்து நடிப்பதற்கு ஊக்குவிக்கவும். மாலை நேரத்திலும் செயல்படுத்தலாம். |

www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 16 |  | **புத்தகப் பூங்கொத்து**<br><br>திறன்: படித்து அறிதலை மேம்படுத்துதல் | புத்தகப் பூங்கொத்தில் உள்ள நூல்களைப் படித்து மகிழ்வதற்காக இச்செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் படித்தல் திறனுக்கேற்ப புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க குழந்தைகளுக்கு உதவவும். |
| 17 |  | **பொம்மலாட்டம்**<br><br>திறன்: குரல் ஏற்றத்தாழ்வு அறிதல், உடலியக்க செயல்பாடு. | பொம்மலாட்டம் நடத்துவதற்கேற்ப அமைந்துள்ள பாடங்கள் பொம்மலாட்டமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பொம்மலாட்டத்திற்குத் தேவையான படங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. வகுப்பில் உள்ள அனைத்து குழந்தைகளையும் இணைத்து நடத்தலாம். ஆசிரியர் ஒருமுறை நடத்தியபின் குழந்தைகளையும் நடிக்கச் செய்யவும். |
| 18 |  | **எழுதும் முறை அறிவோம்**<br><br>திறன்: எழுத்துகளைத் தொடங்கி முடிக்கும் விதம் அறிதல். | எழுத்துகளின் வரிவடிவத்தை எழுதும் முறை அறிந்து கொள்வதற்கேற்ப அம்புக்குறியுடன் கொடுக்கப்பட்டுள்ளன. ஆள்காட்டி விரலைக் கொண்டுத் தடவச் செய்யவும். விதைகள் / கொட்டைகளை அதன் மேல் ஆடக்கச் செய்யலாம். |
| 19 |  | **புத்தகத்தில் எழுதுதல்**<br><br>திறன்: எழுதுதல். | புத்தகத்தில் உள்ள பயிற்சிகள் இச்செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. சக மாணவர் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பயிற்சிகளை புத்தகத்தில் மட்டும் எழுத வைக்கவும்.<br><br>குறிப்பு: முதல் வகுப்பு புத்தகத்தில் 'ழ' எழுத்திற்கான எழுத்துப் பயிற்சிகளை 'ழ' எழுத்துகளை அட்டையில் அறிமுகம் செய்த பின்பு குழந்தைகளை எழுத வைக்கவும். |
| 20 |  | **வலுவூட்டுதல்**<br><br>திறன்: கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல். | பாடப்பகுதியின் திறனை வலுவூட்டுவதற்கேற்ப, புத்தகத்தில் அமைந்துள்ள பயிற்சிகள் இச்செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தாங்களாகவே இச்செயல்பாடுகளைச் செய்வதற்குத் தூண்டவும் |
| 21 |  | **வரைதலும் வண்ணம் தீட்டுதலும்**<br><br>திறன்:முன் எழுத்துப் பயிற்சி, வரைதல், படைப்பாற்றல், கற்பனை. | முதல் இரண்டு வகுப்பு குழந்தைகள் பிரதி எடுத்து வண்ணம் தீட்டலாம். பிற வகுப்புகளில் தாமே வரைவதற்கு ஏற்ப எளிமையான படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் எப்படி வரைந்தாலும் பாராட்டி ஊக்கப்படுத்தவும். பாடப்புத்தகத்தில் உள்ள வரைதலும் வண்ணம் தீட்டுதலும் பகுதிகளை குழந்தைகள் விருப்பப்படி வீட்டிலோ அல்லது பள்ளியிலோ வரையச் சொல்லலாம் |
| 22 |  | **சொந்தக் கருத்தை எழுதுதல்**<br><br>திறன்: சிந்தித்தல், எழுதுதல் | குழந்தைகள் தங்களது சொந்தக் கருத்துகளை / படைப்புகளை எழுதி வெளிப்படுத்துவதற்கு ஏற்ப இச்செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. சொந்தக் கருத்தை வெளிப்படுத்தும்போது குறைகள் கூறாது பாராட்டி ஊக்குவிக்கவும். |

www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| *23* |  | **செயல்திட்டம்**<br><br>திறன்: உற்று நோக்குதல், படத்தொகுப்பு தயாரித்தல், படைப்பாற்றல். | பாடப்பகுதியில் உள்ளதிறனை வலுவூட்டுவதற்கேற்ப இச்செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. குழுவாக இணைந்து செய்யவும் ஊக்குவிக்கலாம். |
| *24* |  | **சொல் விளையாட்டு**<br><br>திறன்: சொற்களஞ்சியப் பெருக்கம். | குழந்தைகளின் சொற்களஞ்சியம், பெருகுவதற்கேற்ப இச்செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்துக் குழந்தைகளும் ஒன்று போல் இல்லாமல் ஒவ்வொரு குழந்தையின் தனித்திறனையும் வெளிப்படுத்தும் வகையில் ஊக்குவிக்கவும். |
| *25* |  | **வீட்டுப்பாடம்**<br><br>திறன்: வீட்டில் செய்யும் கற்றல் செயல்பாடு. | குழந்தைகள் வீட்டில் தாமாகவே செய்வதற்கேற்ப புத்தகத்தில் அமைந்துள்ள பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டுப்பாட அட்டையை, அட்டைகள் வைத்துள்ள பெட்டியில் வைத்தோ அல்லது சுவரில் ஒட்டியோ பயன்படுத்தவும். |
| *26* |  | **கலையும் கை வண்ணமும்**<br><br>திறன்: கைத்திறன், படைப்பாற்றல், கற்பனை. | முதல் இரண்டு வகுப்பு குழந்தைகள் பிரதி எடுத்து வண்ணம் தீட்டலாம். பிற வகுப்புகளில் தாமே வரைவதற்கு ஏற்ப எளிமையான படங்கள் கொடுகக்ப்பட்டுள்ளன. குழந்தைகள் எப்படி வரைந்தாலும் பாராட்டி ஊக்கப்பட்டுத்தவும். பாடப்புத்தகத்தில் உள்ள வரைதலும் வண்ணம் தீட்டுதலும் பகுதிகளை குழந்தைகள் விருப்பப்படி வீட்டிலோ அல்லது பள்ளியிலோ வரையச் சொல்லலலாம் |
| *27* |  | **மதிப்பீடு**<br><br>திறன்: வாய்மொழி மற்றும் எழுத்து மதிப்பீடு. | ஒவ்வொரு படிநிலை இறுதியிலும் அப்பட்டி நிலையில் கற்றுக்ககொண்ட திறன்களை மதிப்பீடும் வகையில் இச்செயல்பாடுகளை கொடுக்கப்பட்டுள்ளன. |
| *28* |  | *1,2,3* **பருவம் - மதிப்பீடு**<br><br>திறன்: வாய்மொழி மற்றும் எழுத்து மதிப்பீடு. | மூன்று பருவ மதிப்பீட்டு செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. பருவ மதிப்பீடு செய்வதற்கு முன் மீள்பார்வை செய்வதற்கான நேரத்தைக் கொடுக்கவும்.(எ.கா) சேர்த்து எழுதுக, பிரித்து எழுதுக, பொருள் அறிக, செய்யுள், விளா விடை போன்றவை. |

**குழுக்கள்**




**முதல் குழு**

**கற்க வேண்டிய திறனுக்கான ஆயத்த செயல்பாடுகளைக் கொண்ட சின்னங்கள் முதல் குழுவில் இடம் பெற்றுள்ளன. இச்செயல்பாடுகள் அனைத்தையும் ஆசிரியரின் முழு உதவியுடன் செயல்படுத்த வேண்டும்.**

www.TeacherTN.com




## இரண்டாம் குழு

கற்க வேண்டிய திறனை அறிமுகம் செய்வதற்கான செயல்பாடுகள் அடங்கிய சின்னங்கள் இரண்டாம் குழுவில் இடம் பெற்றுள்ளன. இச்செயல்பாடுகள் அனைத்தும் ஆசிரியரின் முழு உதவியுடன் செயல்படுத்த வேண்டும்.




## மூன்றாம் குழு

கற்க வேண்டிய திறனுக்கான கற்றல் செயல்பாடுகள் அடங்கிய சின்னங்கள் மூன்றாம் குழுவில் இடம் பெற்றுள்ளன. இச்செயல்பாடுகளின்போது ஓரளவு ஆசிரியரின் உதவியுடன் குழந்தைகள் செயல்பட வேண்டும்.




## நான்காம் குழு

முதல் மூன்று குழுவில் கற்றுக்கொண்ட திறனுக்கான வலுவூட்டும் செயல்பாடுகள் அடங்கிய சின்னங்கள் நான்காம் குழுவில் இடம் பெற்றுள்ளன. இச்செயல்பாடுகளை மேற்கொள்ளும் குழந்தை, தன் குழுவில் உள்ள பறி குழந்தைகளின் முழு உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.




## ஐந்தாம் குழு

குழந்தைகள் தாங்கள் கற்றுக்கொண்ட திறனை வெளிப்படுத்துவதற்கேற்ப செயல்பாடுகள் அடங்கிய சின்னங்கள் ஐந்தாம் குழுவில் இடம் பெற்றுள்ளன. இச்செயல்பாடுகளை மேற்கொள்ளும் குழந்தை தன் குழுவில் உள்ள பிற குழந்தைகளின் ஓரளவு உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

www.TeacherTN.com




ஆறாம் குழு

குழந்தைகள் கற்றுக்கொண்ட திறனை மதிப்பீடுவதற்கான செயல்பாடுகள் செயல்பாடுகள் அடங்கிய சின்னங்கள் ஆறாம் குழுவில் இடம்பெற்றுள்ளன. யாருடைய உதவியுமின்றி குழந்தைகள் தாமாகவே இச்செயல்பாடுகளின் ஈடுபட வேண்டும்.

**புத்தகத்தில் கொடுக்கப்பட்ட சின்னங்கள்**

1. **பாடல்**
2. **கற்றல் கற்பித்தல்**
3. **கலையும் கை வண்ணமும்**
4. **நடிப்போம் நடிப்போம்**
5. **புத்தகத்தில் எழுதுவேன்**
6. **வலுவூட்டுதல்**

**புத்தகத்தில் கொடுக்கப்பட்ட செயல்பாடுகள் முப்பருவ முறை பாடநூலோடு இணைத்து கற்பிக்கும் பொழுது, மாற்றம் ஏதேனும் இருப்பின் அந்தந்த சின்னத்திற்கான, தகுந்த செயல்பாடுகளை ஆசிரியரே தேர்ந்தெடுத்து பயன்படுத்தவும். எ.கா**

**வலுவூட்டுதல் சின்னத்திற்கு பயிற்சியில் உள்ள, அந்த பாடத்திற்கான திறனை வலுப்படுத்தும் வகையில் உள்ளவற்றைப்** ***பயன்படுத்தவும்.***




TeacherTN.com


தமிழ் ஏணிப்படி
மூன்றாம் மற்றும் நான்காம் வகுப்புகள்